நிலாமகளின்

# தமிழே காதல்



# தமிழே காதல்

## காதலர்க்கு ஓர் பூச்செண்டு

**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.
( நிலாமகள் )

வெற்றிமணி வெளியீடு

நூலின் பெயர்

**தமிழே காதல்**

விடயம்:

**சித்திரக் கவிதைகள்**

ஆசிரியர்:

**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.
(நிலாமகள்)

ஓவியம்:

**கண்ணா**

முதற்பதிப்பு 2003

பதிப்புரிமை

**வெற்றிமணி**

*Dr. M. K. S. Sivakumaran B. F. A.*
Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany

## சமர்ப்பணம்

மரணத்திற்கு
முந்திய இரவினிலும்
காதலினால் - உதிர்
காமத்தையும்
காமத்தினால் - உடல்
காதலையும்
காதலிக்காது - உயிர்
மண்ணைக்
காதலித்த - உயர்
மறவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்



# காதல் பற்றிய காதல்

இரவு பதினொருமணிக்கு நிலாமகளின் தமிழேகாதல் என்னும் பருவப்பாடல்கள் தொகுப்பை மேய ஆரம்பித்தேன். எழுபது நிமிடங்களுக் குள் மேச்சல் முடிந்தது. மதியப்பொழுதில் நிற்கும் எனது வயது, ஒரு முப்பது வருடங்கள் பின்னோக்கிப் போனதை உணரமுடிந்தது.
வாசிக்கையில் புதுக்கவிதைகள் போன்றும், படிக்கையில் பாடல்கள போன்றும் அமைந்துள்ள இத்தொகுதியில் ஒன்று இரண்டு கைக்கூக் களையும் (எங்கு பார்க்கினும் பெண்கள் வேண்டும் அத்தனையும் நீயாக வேண்டும்) காணலாம். கிசு கிசு,கிளு கிளு, கிளப்பக் கவிதைகள் பலவுண்டு.

தனித்திருந்தும் படித்துச் சுவைக்கலாம்
கூடியிருந்தும் ரசித்துக் கடிக்கலாம்.

பருவச் சுவைதானே என்று எண்ணி அதற்குள் முகம் புக முனைந்தால் முதலில் எங்கள் மண்ணின் மைந்தர்களைத் தரிசிக்கலாம். அவர்கள்தான் தொகுப்பின் வாயிற்கதவுகள்
மரணத்திற்கு முந்திய இரவிலும், உயிர் மண்ணைக் காதலித்த உயர் மறவர்க்கு இந்நால் அர்ப்பணம் என்னும் வரிகள் உயிரோட்டமானவை.
தற்கொடையாளர்களை ஒருகணம் மனதில் பூஜிக்கவைக்கின்றது.
தொகுதியின் ஒவ்வொரு கவிதைகளையும் விமர்சிப்பதானால், அதுவே பெருநூலாகி விடுமென்னும் விரிவஞ்சி சிறு பருக்கைகளைச் சுட்டி பானையின் சுவையைக் காட்டுவதே நன்று.

ஒரு மல்லிகை மலர்
பூத்தது செடியில் அல்ல
அவள் கூந்தலில்....

இதனைப்பறிக்கச்சென்றால் கன்னத்தில் விழுவது சகஜமே!

**அ** என்றால்
எனக்குப் பயம்
எங்கே என்னை
அண்ணா என்று விடுவாளோ என்று...

ஒருத்தியைக் காதலிக்கத் துடிக்கும்
ஒருவனின் அங்கலாய்ப்பு இது.

# காதல் பற்றிய காதல்

வாழ்விலும் தாழ்விலும்
நம்பிக்கை காதல்
அடிமையின் வாழ்வில்
விடுதலை காதல்
தாயின் மடியில்
சேயே காதல்

இப்படி எத்தனை எத்தனையோ கவிதைகள் கலையம்சத்துடன் மலரில் மணம் பரப்புகின்றன. சுகந்தத்தின் வீச்சினால் வண்டுகள் ரீங்காரமிடுகின்றன. ஒரே மயக்கம்தான்.
நிலாமகளின் கலாரசனைக்கு நிகராக அவரது தூரிகைகள் கலைவண்ணம் சேர்ப்பது அவருக்குக் கிடைத்த ஏ ப்ளஸ்.
இவரது எழுத்துக்கள் வெறும் கற்பனை ரசங்களல்ல. காலத்தின் வேஷத்திற்கு ரசனை கோர்க்கும் வாசகங்கள். சின்னச் சின்ன வரிக்கு உயிர் கொடுக்கும் சித்திரங்கள் சாகாவரம் தருகின்றன.

கவிஞன் காலத்தை வென்றவன்
ஓவியன் கோலத்தை ஆள்பவன்
கவிஞனும் ஓவியனும் ஒருவனேயாக
உலகப் பல்கலைக்கழகமே
எங்கள் கலைஞரைக்
கலாநிதியாகக் காணுமானால்!
கண்ணாவே நிலாமகள் என்றால்...
சிவகுமாரனுக்கு வாழ்த்துக்கள்!

பருவப்பாடலை விரியுங்கள்
தமிழே காதலாகுங்கள்
முகம் புதைத்துவிடாதீர்கள்
மூச்சுத் திணறி விடாதீர்கள்
அதனாலலென்ன
மூச்சத்திணறலும்
ஒரு கலை ஆகட்டுமே!

**திரு.எஸ்.திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
தமிழர் தகவல் - கனடா

## என் காதலுக்குப் பச்சைக் கொடி

நிலாமகளின் பருவப்பாடல்கள்
நிதர்சன உணர்வுகள் பொழிந்து தேங்கிய
நெஞ்சிலே ஊற்றெடுத்து பூத்துக் குலுங்கும்
வசந்தச் சோலைவழியாகப் பாய்ந்து
கவிதைக்கடலில் தமிழே காதலாகிக்
கலக்கின்றன! - அங்கு
வயது வந்தவர்களும் துள்ளிக்குளிக்கின்றார்கள்
இளமை பேருவதற்கு!

**கலாநிதி வி.கந்தவனம்**

புதுக்கவிதைகளின் வெற்றிக்கு பல சந்தர்ப்பங்களில் அவற்றில் கையாளப் படும் படிம உத்திமுறைகளே காரணமாக அமைந்து விடுகின்றது. கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் மேத்தா போன்ற புகழ் பூத்தவர்களின் வெற்றிக்குக்காரணமே அவர்களது கவிதைகளில் மிகையாகக் காணப்படும் படிம உத்திகளே என்று கூறினால் மிகையாகாது. இவ்வாறான தன்மைகள் நிலாமகள் எழுதிய தமிழேகாதல் தொகுப்பிலும் நான் காண்கின்றேன்.
இதில் சிறிய கவிதைகள் பலவுண்டு. அனால் அவற்றில் காரம், பாரம், அதீதம் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஆர்.என்.லோகேந்திரலிங்கம்**
பிரதமஆசிரியர் உதயன் - கனடா

பத்துநாள் சிந்தனையைப் பத்தே வரிக்குள் வைத்து
பக்குவமாய் கவியமைக்கும் அழகு தனி அழகுதான்
பருவப்பாடல்களைப் படித்ததும் எனக்குள் - அந்தப்
பழம்பருவ நினைவுகள் நிழலாடலும் புதுமைதான்
எழுத்தில் எழுச்சியும் உருவமைப்பில் உயர்ச்சியும்
அப்பப்பா பருவப்பாடல்கள் நமக்குப்
பரிசுப்பாடல்கள்.

சிந்தனைச்செலவர்
**எழிலன்** - யேர்மனி

புலம்பெயர் நாட்டில்
தமிழோடும், கலையோடும் வாழ்பவர் திரு.மு.க.சு. சிவகுமாரன்.

ஆன்மீகத்தென்றல் **த.புவனேந்திரன்** - யேர்மனி

# என் காதலுக்குப் பச்சைக் கொடி

கேள்விக்குள் பதிலையும், பதிலுக்குள் கேள்விகளையும்
கொண்டது காதல்.
இந்த கவித்துளிக்குள்ளும் ஆயிரம் ஆயிரம் கேள்விகள்
அதற்குள்ளும் பதில்கள்
ஆசையோடு வாசித்தேன்! அதற்குள் பூரித்தேன்!!

அன்புடன்
**ராஜ்குமார்**
கீதவாணி - கனடா

சித்திரத் தமிழிற்கு முத்தாரம் இடும் நிலாமகளின் காதல் கவிகள் காலத்தால் அழியாதவை

**செ.அசோகமூர்த்தி** (தலைவர் குரும்பசிட்டி நலம்புரி சபை - கனடா)

நினைத்த எண்ணங்களை எழுத்திலும் படத்திலும் பதிக்கும் பல்திறன் வாய்ந்த சிவகுமாரனின் தமிழே காதல் பல்வேறு வயதினரையும் மெய்சிலிர்க்கவைக்கும் நவீன கவிதைகளாக அமைந்துள்ளன. தலைப்புக்களில், வரிகளில் புதுமைகாட்டி நிற்கின்றன. இப்புதிய சிந்தனையாளரது படையல்கள் நமக்குப் பலவேண்டும்

**எஸ்.பத்மநாதன்** (சிந்தனைப்பூக்கள் ஆசிரியர் - கனடா)

திறவுகோல் கவிதை அருமை. கடந்த காலம், நிகர்காலம், எதிர்காலம், என முக்கனிகளின் சாற்றில் தமிழைக் குழைத்தது பருவப்பாடல்கள்.அதன் சுவையோ சுவை! காதலுக்கு ஒரு பூச்செண்டு அல்லவா தங்கள் கவிதைகள்.
அன்புடன்
**வாசகி**

கண்ணாவின் சித்திரத்தில் பரதத்தின் அபிநயங்களையும்,அவர் தமிழில் நிலாமகளின் அழகையும் காண்கின்றேன்.

பரதமாதேவி திருமதி.**வானதி தேசிங்குராஜா** - யேர்மனி

# என் காதல் உன்னோடு

என் இனிய தமிழே!

உன்னைப்போல் என் காதலும் என்றும் இளமையானது. காதலுக்கு பிழை சரி தெரியாது. ஆனால் காதல் மட்டும் மெய்யானது. என் காதல் தமிழுக்கு என் தூரிகையைத் தூது விடுகின்றேன். பிழையிருந்தால் பொறுத்து, என் காதலை வாழவையுங்கள்.

சின்னஞ்சிறு வயதில் தாயகத்தில் குரும்பசிட்டி என்னும் இலக்கியக் கிராமத்தில் செம்பாட்டு மண்ணில் பண்பாட்டுக் கோலங்களை வரைந்தபோது...

நான் கிறுக்கிய கோடுகளை ஓவியம் என்றும், நான் காதலித்த தமிழைக் கவிதை என்றும், நான் புனைந்த உருவகங்களைக் கதை என்றும், நான் பிடித்து வைத்த களிமண்ணைச் சிற்பம் என்றும், இனங்காட்டி, அவைமேல் எனக்கு உயிர் ஊட்டி, என்னை வளர்க்கவென்று நெய்யூற்றிய மெய்யறிஞர்களுக்கும், என் பெற்றோர்களுக்கும் நன்றிகள் பல.

தமிழே காதல் என்னும் இந்தக் கவிபாடும் சித்திரக் கூடத்திற்கு மதிப்புரை தந்த தமிழர்தகவல் பிரதம ஆசிரியர் திரு.எஸ்.திருச்செல்வம் அவர்களுக்கும், என் கவிமீதும், சித்திரத்தின்மீதும் கொண்ட காதலினால் இந்நூலக்கு, நல்லறிமுகம் தந்த மகாஜனக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்களுக்கும்,

இந்நூலின் அட்டையை அழகுறவடிவமைத்த என் கலைமகன் சஞ்ஜீவன் சிவகுமாரனுக்கும், என் கவிதைகளை வாசித்து அதன் முத்துக்களை விமர்சனமாக ஒளிரவிட்ட அறிஞர்களுக்கும், என்னைத் தமிழாய்வளர்க்கும் உங்களுக்கும் என் நன்றிகள்.

நேரத்தின் அருமை
காதலர்க்கே தெரியும்.
எனவே..
இடையில் இனி நான் வரவில்லை.
புரட்டிப் புரட்டிக் காதலியுங்கள்.... பக்கங்களை.
காதல் நெருக்கத்தில் தேன் சொட்டட்டும்.
போதை தலைக்கேறிடினும்
**தமிழே காதலாகட்டும்.**

அன்புடன்
**நிலாமகள்**



தேன் தமிழில்
ஊறிய என் உயிர்ச்சித்திரமே
காதலுக்காகத் தமிழா!
இல்லைத்
தமிழுக்காகக் காதலா
புரட்டுங்கள் பக்கங்களைப்
புதிருக்கு விடைகாண....

# தமிழே காதல்

வாழ்விலும் தாழ்விலும்
நம்பிக்கை காதல்

அடிமையின் வாழ்வில்
விடுதலை காதல்

தாயின் மடியில்
சேயே காதல்

பெற்றவர் எதிர்ப்பிலும்
முற்றிடும் காதல்

சுற்றும் உலகில்
தாய் மொழிக் காதல்

என்றும், எதிலும்
காதல்!காதல்!காதல்!

தாயும் மொழியும்
காதல் விழிகளானால்

தரணியில் - என்றும்
தமிழே காதல்



# சொடுக்கி வடித்த ஓவியம்

காரிகையே
இப்போ - நான்
தூரிகையைத்
தொடுவதில்லை
நீர் வர்ணத்தையும்
தீண்டுவதில்லை
மனதில் வரும்
சித்திரத்தை
மின்திரையில்
பதிக்கின்றேன்
நான் படைக்கும்
ஓவியத்தின்
வர்ணம் இப்போ நீயடி
உன்னை எடுத்து வைத்து
உன் நிறத்தை
உறிஞ்சிப் பெற்று
எழில் வண்ணம்
தீட்டுகின்றேன்
தூரிகைக்குப்பதிலாக - உன்
துடியிடையின்
அசைவைப்போல்
சொடுக்கியால்
சொடுக்குகின்றேன்
பின்னணிக்கு வேண்டியதை
இயற்கையை அழைத்துவந்து
கணனியில் - என்
இச்சைபோல் வடிக்கின்றேன்
காலத்தின் கரம் கொண்டு
கோலத்தை ஆழ்கின்றேன்



# அறுசுவை ஒப்பந்தம்



நேற்றுச்
சோற்றுக்குள்
நீரை விட்டு
இன்று
பாருக்குள்
நிகரில்லா
பண்டமென
அமுதுதந்தாய்
அது
உன் ஐந்துவிரலுடன்
அன்பு செய்துகொண்ட
அறுசுவை
ஒப்பந்தமல்லவா!

# என் காதல் கிராமம்




என் உடலின்
நாடி நரம்புகள்
உயிர்பெற்ற - அந்தக்
காதல் கிராமத்தில்
என் ரலிச்சைக்கிள்
ஓடி நகர்த்திய
நற்கோலங்கள்

வாழ்வில்
எத்திக்கில் நான்
சென்று வாழ்ந்தாலும்
தித்திக்கும் நினைவுகள்
என்றும் - என் காதல்
கிராமத்தில்தான்



# தாயின் உயர்ச்சி

சீ-என் ரவரில்
நின்று பார்த்தால்
அந்த நிலவு கிட்ட
என்றாள்

நானோ சீச் சீ
நிலவு இன்னும் கிட்ட
தாயவள் தோள்களில்
நான் இருந்த வேளை
என்றேன்

அந்தத் தென்னங்கீற்றின்
இடையே - கைக்கெட்டும்
தூரத்தில் அல்லவா
இந்த நிலவு
இருந்தது அன்று

# கைதியின் ஆசை



என்னைக் கைது செய்த
மலர் விழிகளே
என்னைக் காவல் காக்கும்
கரும் கூந்தலே
என் வாயை அடைக்கும்
இன்ப இதழ்களே
உன்னை ஒன்று
கேட்பேன்
இந்த ஆயுள் கைதியை
என்றும்
விடுதலை செய்யாதே

# (தீ) அணைப்பு



நனைந்த தீக்குச்சியை
உரசினேன்
தீயைக் காணவில்லை
நனைந்த உன்னை
உரசினேன்
தீயணைக்க யாருமில்லை!



# பிரம்மன்

வண்ணக் காரிகையே!
எந்தத் தூரிகை கொண்டு
உன்னைப் பிரம்மன் தீட்டினான்.
அந்தத் தூரிகையைக்கொடு
அதன் முனைப்பாக
நான் இருப்பேன்
உன் வாழ்வினைக் கொடு
வர்ணமாய் - நான் கலந்திருப்பேன்
ஓ!ஓவியமே
வா என்னோடு
வாழ்வைக்
காவியமாக்குவோம்
பாவம் பிரம்மன்
படைத்து படைத்து
களைத்து விட்டான்
நீ என்னை நம்பு
நாம் எடுப்போம்
பிரம்மனின் அவதாரத்தை

# கிசு கிசு!

விமானம்
விழ்ந்தது
எவரும் இறக்கவில்லை

எரிமலை
வெடித்துச் சிதறியது
உயிர்ச்சேதம் ஏதும் இல்லை

தண்டவாளம் பிரிந்து
புகைவண்டி
தடம் புரண்டது
அங்கும் ஒரு மரணம்
இல்லை

அடடா! இது என்ன புதுமை
இனி உலகில் மரணமே
இல்லையா? - என
வியந்தவேளை

யமதர்மனுக்கும்
சிலுக்கிற்கும்
ஏதோ கிசு! கிசு!!
என்ற சேதி வந்தது



# முடிவு அல்ல தொடக்கம்

கற்றுத் தெளிந்து
அனுபவப் பாடத்தைக்
கரைத்துக் குடித்து - பின்
முதுமையைக் கண்டதும்
ஒதுங்கிக் கொள்ளாதே

முழுமை பெற்ற
அறிவை
முடக்க முடிவல்லவே
முதுமை

பெற்ற அறிவை
விதைக்கத் தொடங்கும்
தொடக்க இளமையே
முதுமை

பூத்துக் காய்த்து
பழுத்து வீழ்ந்த
வித்தே - உனக்கு
அது முடிவல்ல
அதுவல்லவா தொடக்கம்

முத்தமிழே!
முதுமையே - உன்
இளமையின்
காதல் இரகசியம்



# ஒரு நிலவின் கலக்கம்



கண்ணா!
உன்னைப்பாட
கவிதை வராதே
எனக்கு

கண்ணே!
கலங்காதே

நிலவும்
மலரும்
நீயும்
என் கவிதைக்
கருவல்லவா!



# என் நிலா

நான் தேடியபோது
வராத தேன் நிலவு
நான் தேய்கின்றபோது
வந்ததே என் முற்றத்தில்

# வேலை வாய்ப்பு

அவளைச் சுற்றியிருந்த
தாவணி
என்னைச் சுற்றி
படர்ந்த வேளை
பாலர் வகுப்பில்
படித்தவர்க்கு எல்லாம்
வந்தது வேலை வாய்ப்பு

தபாற்காரனாக

ஊதியமோ
ஊதிமகிழ பலூனும்
உருட்டிவைத்த
ஒரு தும்புமிட்டாயும்



# முக்கனி

வாழைப்பழம்
மாம்பழம்
பலாப்பழம்
இவற்றை
முக்கனிகள் என்றது
சங்கத் தமிழ்
சங்கத் தமிழே!
உனக்கு
என்னவளைத் தெரியாது
தெரிந்திருந்தால்
அக்கனிகளை
அவளிடையே
கண்டிருப்பாய்



# இனிய சாபம்

அகலிகையை
கல்லாய்ச் சபித்த
மாமுனியே!
`எம்மையும்
கற்சிலையாய்ப் போக - ஒரு
சாபமிடுங்கள்

நாம் என்றும்
பிரியாது
இறுக்கம்
குறையாது
இறப்பு
நெருங்காது
இருக்க - அது
வழி கொடுக்கட்டும்.

# காதல் இரகசியம்

ரோசாப் பூக்கள் - இன்று
வாசம் பூசுது

ஆதவன் ஒளிபெற
மின்சாரத்தை நாடுது

பூத்த மரங்கள்
காய்த்துக்
கனிய
ஊசிபோடுது

இயற்கையே - நீ
செயற்கையிடம்
உன்னையே கடனாய்க்
கேட்கிறாய்

காதலே
நீ மட்டும் காதலாய்
கல்லுக்குள்
ஈரமாய்
தீக்குள்ளும்
தேன்மலராய் - என்றும்
மலர்வதெப்படி



# தட்டிப் பார்த்திருக்கலாம்

கிட்டிப் புள்ளென
நான் பறந்தவேளை
என் நெஞ்சைத்
தட்டிப்பார்த்திருக்கலாம்
என்னைக்
கேட்டும் பார்திருக்கலாம்

இப்போ
முட்டி மோதி
வாழ்வோ பாதி
எட்டிப்போனபின்
வெட்கம் தெளிந்து
கேட்டுவிட்டாள்
நாம் இனி
மணப்போமோ என்று

நான் சொன்னேன்
மணப்போம்
ஆனால்!
வாழ்வோ - இனி
மணப்பதற்கில்லை என்று



# தயாராகினேன்

பறப்பதற்கு
தயாராகினேன்
உன் இதயவானில்
நீந்துவதற்குத்
தயாராகினேன்
உன் கருவிழிக்கடலில்
உறங்குவதற்குத்
தயாராகினேன்
உன் நெஞ்சமென்னும்
மஞ்சத்தில்
சுமப்பதற்குத்
தயாராகினேன்
உன் குழந்தையை
என் வயிற்றில்
அதனால் - இன்று
தாயாராகினேன்



# தணிக்கை

பெண்ணடிமையாம்
தினம் நினைவூட்ட வரும்
கவிதைகள் கட்டுரைகள்
இன்னும் பல கதைகள்
பெண்ணடிமை நீங்குதோ
அது இல்லையோ
அதைக் கருவாக்கிப்
பிரசவிக்கும்
குழந்தைகட்கோ அளவில்லை
பெண்ணடிமை இன்னும்
உடைத்தெறியப்
படவில்லையெனில்
சொல்பவரும் செய்தில்லை
என்பதே வெளிப்படை
சும்மாதிரியும் பெண் குழந்தை
அப்பா! நானும் அடிமையா?எனக்
கேட்கவைக்குதே
நாளும் வரும் கவிதையெல்லாம்
'----------' என்ற சொல்லைத்
தணிக்கை செய்திடுவோம்
வருங்காலச் சந்ததிக்கு
அது தெரிய வேண்டாம்

# காலம்



பாடசாலை வாழ்க்கை
இன்று நினைத்தாலும்
சாலையில் ஓடும் வாகனம்போல்
இங்கும் அங்கும் பறக்கின்றது

அன்று வலன்டையின் தினம்
என் வாழ்த்துக்கள்! வசந்தி
என்றேன்
அவள் பார்வையோ!
வலன்டைனைக் கொன்ற
மன்னனின் பார்வையை
மிஞ்சியது

பாராமல் சென்றவள்- இன்று
திரும்பி வந்தாள்
கட்டி அணைத்து
முத்தம் தந்தாள் - பின்
வலன்டைன் தினத்திற்கு
பெரும் வாழ்த்தும்
சொன்னாள்
சொன்னது எனக்கல்ல...

நித்தம் என் மடியிருக்கும் - என்
பேரனுக்கு
கூட்டிக் கழித்துப் பார்த்தேன்
இடையில்
நாற்பது வருடங்களை
விடையில்
காணவில்லை
காணமற்போனது
காதல் அல்ல - எம்
காலம்

# அஞ்சல்



வீணை என்னும்
மலரணையின் மேல்
உன்னை நாதமாய்
சுரம்வடித்து
ஆசையில்
எழுதிய காதல்
மடலை - நான்
ஆஞ்சலிடப்
போவதில்லை.
காரணம்:
உன் முகவரியே
என் முகவரியானதால்

# குறள் வழி இவள் ஒளி

குந்தியிருந்து
ஏற்றுகிறாய்
குத்துவிளக்கை - அந்தக்
குறள் வழி
வாழும் பெருமனம்
கொண்டு
முந்தியிருப்பாய் பார்!
இப்பாரினில்
என்றும்
குலவிளக்காய்.

# போதை



பூக்களின்
இதழ்கள்
மதுவைச்சிந்தும்
ஆனால்
இதழ்களோ!
மது
அருந்தாது.

# தொலைக்காதே!

என் மாந்தோப்பே
முல்லைச் சிரிப்பே
காந்த விழியாளே! - நீ
உன் இடையைத்
தொலைத்ததுபோல்
என்னையும்
தொலைக்காதே!

# பிரிவும் பரிவும்



ஆயிரம் மைல்கள்
தண்டவாளத்தில்
ஆரத் தவழ்ந்து ஓடிவந்த
புகைவண்டிச் சக்கரங்கள்
பாதை பிரிகின்றவேளை
உரசிப் பிரிந்து
தீப்பொறி கக்கும்

பட்டப் படிப்பு
படிக்கும் வேளை
பக்கம் பக்கம்
ஒட்டியே இருந்தும்
எட்டியும் பார்க்காத
காதல் நெருப்பு

சிலர் வாழ்வில்...

பட்டம் பெற்றுப்
பிரியும் வேளை
பட்டென்று அதுவாய்
பற்றிக்கொள்ளும்
காதல் நெருப்பு

பிரிவே நீ காதலை
அழிக்கும் நெருப்பல்ல
இரு உள்ளத்தை
உருக்கி ஒன்றாய் ஒட்டும்
அழகுத் தீயே பிரிவு!

## காதல் விஞ்ஞானம்



என் மீது
குறிவைத்தவள்
மேக்கூறி அம்மையாரின்
பேத்தியா? இல்லைப்
பூட்டியா?
இப்படி ஒளிர்கிறாளே
இரவும், பகலும்
பூட்டிவைத்தும்
என் இதயத்துள்.

## பட்டு + மேனி

அன்று அவன் கரம் பட்டு
மலைகள் வெடித்தன
மன்னர் முடிகள் பறந்தன
இன்று என் துடி இடைவரை
பாயும் கார்குழல் நதியில்
அவன் கரம்பட்டதும்
ஏனோ பார்!
பூக்கள் மலர்ந்தன
பா ரெங்கும் பூவிதழ்
தேன் சொரிந்தன.

# அவள் என் அன்னை!



என்னைத் தேடினேன்
உன் விழிகளில் கண்டேன்
உணவினைத் தேடினேன்
உன் கரங்களில் கண்டேன்
நினைவினைத் தேடினேன்
உன் இதயத்தில் கண்டேன்
நூலினைத் தேடினேன்
உன் இடையினில் கண்டேன்
குடையினைத் தேடினேன்
உன் நிழலில் கண்டேன்
அன்னையைத் தேடினேன்
உன் மடியினில் கண்டேன்

# புல்லாகிப் பூடாய்....



புல்லாகிப் பூடாய்
புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகி
பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்
பேயாய்...
இப்படி - என்
முற்பிறப்பு எல்லாம்
கெட்டியாய் படர்ந்த - என்
பூங்கொடியே
கல்லாய் இருக்கையில்
கற்சிலையாய் வடித்தென்னை
பொல்லாத மனிதரும்
கைதூக்கித் தொழும்
வல்லாளனாய் எனை வடித்தாய்
ஆனால்!
மானிடனாய் அவனியில் - நான்
பிறந்து உன்னைக்
காணும் வேளையிலே
கல்லாச் சபித்து
வேற்று கானம் இசைத்து
சொல்லாமல் பறந்ததேன்?
என் பைங்கிளியே!
முற்பிறப்பில் கொண்ட
காதலின் சலிப்போ!
அன்பே!
மீண்டும் பிறப்பேன்
உன்னைத் தேடி அலைவேன்
வேண்டும் என்றால்
மேலே பார்
கல்லாய் மனிதராய் அடுத்து
என்னவென்று..

# 6

# அறிவு



துள்ளித்திரிந்த வயதில்
திருடிவைத்த
காதல் வித்து
பள்ளிப்பருவம் தாண்டி
திருமணம்
வந்தவேளை

புதைத்து வைத்த
காதல் விதை
தானாக அரும்புவிட்டு
மேல் எழ
தேனாகச் சொட்டும்
ஒரு வாழ்வை
நாமாகத் தேடிச்
சென்றோம்

விதைப்பதற்கு
எங்களுக்கு ஏதுரிமை
பெயர் இட்டவர் கைகளிலே
நம் வாழ்வாம்

ஐந்தறிவுக் குட்டி இரண்டு
துள்ளிக்குதித்தபடி
உயர்வறிவாம் ஆறறிவு
அது எது? எனக்கேட்கிறது.



# விரலுக்குள் கணனி

கண்ணே!

என் கணனியைக்கேள்
நீ பதித்த சுவடுகளை
தொலையாது
வாசிக்கும் - தன்
திரையில்

கண்ணா!

கணனி என்ன கணனி
நீ என் விரல்களைக்கேள்
நடு நித்திரையிலும்
வாசித்துக் காட்டும் - உன்
தொலைபேசி
இலக்கத்தை

# மயிலின் தவம்

நாடித் துடிப்பையும்
தசைகளின்
அசைவையும்
காணக் கணனிகள்
கண்டார் இன்று

நாடித் துடிப்பில்
மனிதன் உணர்வையும்
காணக் கலைக்
கணனிகள்
கண்டார் அன்று

கலையென்னும்
கணனியில்
ஒரு வகையே இந்தக்
காவடியென்னும்
கலை

இசையின் அலையால்
துடிக்கும்
நரம்புகள்
மயில் இறகுக்கும்
உயிர் கொடுக்கும்

அசையும் இறகின்
அழகினைக்காண
ஆசையில் - அந்த
மயிலே
தவம் கிடக்கும்



# முத்திரை



பரந்து விரிந்த
கடலில் நீரைத்
தேடுபவன் போல்
பரதத்தின்
முத்திரைகளை
உன்னிடம் தேடினேன்

அவை

நித்திரையிலும்
உன் உச்சி முதல்
பாதம் வரை
சித்திரமாய்
பத்திரமாய்ப்
பூத்துக்கிடந்தது

# ச ரி க ம ப த நீ

உன் மடியில்
நீ தாளமிட்டு
சரி கம பத நீ பாடும் வேளை
என் உயிரின் இசை மீட்டச்
சரியானவள் - நீ
எனக் கண்டுகொண்டேன்

# காதல் கொள்வோம்



சுடும் வெய்யிலில்
காடுகளை மேடுகளை
கடும் உழைப்பினால்
களனியாக்கி
வாடும் மக்களுக்கு
உணவு கொடுக்கும்
உழவர்

சுடுகுழல் கொண்டு
படும் துன்பம் நீங்க
காடு களனி எங்கும்
கடும் காவலரணமைத்து
வாடும் தமிழ் இனத்திற்கு
உயிர் ஊட்டிய
தமிழ்மறவர்

அந்த மறவர்க்கு!

எடு தமிழரசி
புகழ் மாலைகளை
சூடு!
வெற்றிச்சுடர்
ஏற்றிய அந்த மன்னவர்
தோள்களில்

மிடுக்கோடு இனித்
தமிழால் காதல்
செய்வோம்
கெடுப்பவர் உளரேல்
நாணித் தலைசாயட்டும்
நாளை

# ஊற்று

உற்று நோக்கும்
உன் விழிகள்
என் கவிதைக்கு
உயிர் ஊற்று



# அக்கணம்

சுடர் அணையும் வேளை
திரியை நேசிக்கும்
தரையில் மீன்
துடிக்கும் போது
நீரை நேசிக்கும்
புயலில் தத்தளிக்கும் படகு
துடுப்பை நேசிக்கும்
என் உயிர் பிரியும் நேரம்
உன் பெயரைச் சுவாசிக்கும்

# காதல் கணக்கில் சித்தியில்லை

## $\frac{99}{100}$ %



திருமணத்திற்கு
நாள் குறிக்கமுன்
திரும்பத் திரும்ப
நான் கேட்டேன்,
ஒரு எத்தனை
வீதம்தான் - என்னில்
காதல் என்று.
நிலா விழியின்
முன் படர்ந்த
கருங்கூந்தல்
முகில் விலக்கி - அவள்
சொன்னாள்
தொண்ணுற்றியொன்பது
வீதம் என்று.
என்னால் மூச்சுவிட
முடியவில்லை
ஏன்!அது ஏன்!!!
நான் கேட்டது
எண் கணக்கு அல்ல,
காதல் கணக்கு அல்லவா!
பட்டென்று கேட்டேன்
அப்போ மீதி ஒரு வீதம்
அது யாரில் என்று!
சட்டென்று பதில் வந்தது
அதோ! அது உங்கள்
நண்பனில் என்று.
தொண்ணுற்றியொன்பது
எடுத்தும், கோட்டை விட்டாள்
காதல் கணக்கில்.
திருமணம் நடந்தது.
ஆனால்!
எனக்கல்ல
ஒரு வீதம் பெற்ற
என் நண்பனுக்கு



# அந்த அந்தரக்ஸ்க்கு நன்றி!

உன் கடிதத்தை
இப்போ நான்
முத்தமிடுகின்றேன்
முத்திரையை உரித்தும்
கடித உறையினைப் பிரித்தும்
ஒட்ட நீ ஒற்றிய
உயிர்த்தேனை
உறிஞ்சி!உறிஞ்சி!!
மதுவின்பத்தில்
மிதக்கின்றேன்.

இப்போ கடிதத்தில்
எவர்கையும் பட்டு
இதழ் மணம் கெட்டு
கலப்படமாகாத
காதல் தேனல்லவா அது!

ஆகாயத்தை
அண்ணாந்து பார்த்து
அந்த அந்தரக்ஸ்க்கு
நன்றி சொல்கின்றேன்
உன் பயம் உள்ளவரை
காதலர் கடிதத்தை
பிறர் இனித் தீண்டார்.

# நெற்றிக்கண்



உயிரிலும் உடலிலும்
சரிபாதி தந்தேன்
அந்தச்சிவன் பார்வதிக்கு
பாதி கொடுத்தாற்போல்
என்றேன்

நமக்கு இனி ஒட்டில்லை
உண்மை உறவுமில்லை
உங்களிடம் ஏமாற
உமையவள் நானில்லை
என்றாள்

கொடுப்பதற்கும் - நான்
பெறுவதற்கும்
இங்கே இடமுண்டானால்
மறைமுகமாக
பாதிகொடுத்த நீங்களே
இங்கும் அதிபதி என்றாள்

மூன்று நாளாக - என்
முகத்தில் விழிக்கவில்லை
விழிகளும்
இருந்த இடத்தில் இல்லை
விழிகள் ஒன்றாகி நெருப்பாகி
நெற்றிக்கு இடம்மாறிவிட்டது

சட்டென்று
கட்டி அணைத்தேன்
சுட்டெரிக்கவில்லை
சுட்டியே நின்றது - நான்
விட்ட பிழையை மட்டும்

# பயம்

'அ' என்றாலே
எனக்குப்பயம்
எங்கே!
என்னை
அண்ணா! - என்று
அழைத்துவிடுவாளோ
என்று

# உயிரும் உயிலும்

இடது தோள்
இனி எனக்கு - என்
உடலும் உயிரும்
இனி உனக்கு



# ஆசை

எந்தப் பக்கம்
பார்த்தாலும்
பெண்கள் வேண்டும்
அத்தனையும்
நீயாக வேண்டும்

# தாய்

மண்ணிலே
வித்து விழுந்து
விருட்ஷமாக
மண்ணே
தாயாகிறாள்

தாய் வயிற்றில்
கருவளர்ந்து
உலகிற்கே
விருட்ஷமாக
தாயே
மண்ணாகிறாள்



# முகவரி தேடும் முழு நிலவு

காலையும் மாலையும்
உன் குரல் கேட்டுப்
பாடுது இங்கே
பூங்குயில் ஒன்று

பாலிலும் தேனிலும்
சுவை இல்லை என்று
தேடுது தேனீ - தினம்
உன் இதழ் கேட்டு

பகலில் தூங்கி
இரவில் விழிக்கும்
முழு நிலவே! - நீ தேடுவது
உறவின் முகவரியே!

# பிரம்மன்

கண்ணில் தெரியும்
காட்சி எல்லாம்
நேரே வரைவதில்லை
இயற்கையைப் பார்த்து
செயற்கையைப் படைப்பதில்
ஒரு கலைஞனுக்கு
ஈடிணை ஏதுமில்லை
மறு பதிப்புக்களால்
எம் கலையின் மதிப்போ
உயர்வதில்லை
நிஜங்கள் நிழலுக்கு
நிறம் தீட்டி - அந்த
நிஜங்களையே
இங்கு மீட்டுவர
இந்த உலகம்
சுழலவில்லை
பார்த்ததும் புரிய
ஒன்றும் ஒன்றும்
இரண்டு என்பதா
நம் கலையின் நிலை
சிந்தனையின் பின்னே
விருந்தானால் - அந்தக்
கலைக்கொரு
விலையில்லை
மனிதனைப் படைத்தவன்
பிரம்மன் - அந்தப்
பிரமனைப் படைத்தவனோ
கலைஞன்



# இன்று
# நீ
# என்னுடன்



அழகு நிலவில்
நீரும் காற்றும்
இருந்திருந்தால்
ஆம்ஸ்ரோங் - இன்று
உன்னிடன்

ஆழ்கடலில்
காற்றும் ஒளியும்
இருந்திருந்தால்
கொலம்பஸ் - இன்று
உன்னிடன்

ஆழகே!
உன்னிடம்
உண்மைக் காதல்
இருந்திருந்தால் - இன்று
நீ என்னுடன்

# தாய்மண்



குறுக்குக் கட்டும்
குறும் வடலித் தட்டியும்
எதனை மறைத்தாலும்
உன் நினைவை
மறைக்கவில்லை

உன்னைப்
பார்த்ததும்
கட்டி அணைத்து
புரண்டுமகிழ
மனம் துடியாய்த்
துடிக்குதடி

கண்ணே!
உன்னை யார்
சொன்னார்
பெண் என்று?

மண்ணடி - நீ
பொன் மண்ணடி
என் தாய்மண்
அது நீதானடி!

# உள்ளே! வெளியே!

அன்றும் இன்றும்
என் சுவாசத்தில்
உள்ளே வெளியே
விளையாடும்
என் காதலியே
நீ என்றும் இருப்பாய்
என் சுவாசத்தில்

# நாணம்



குனிந்த தலை
நிமிரவில்லை
நான் பெண்
என்பதால் அல்ல
அது உன்னை
நேரில் அல்ல - அந்த
நீரில்
கண்டுகொண்டதால்

# சந்தை

காண்பதெல்லாம்
நீயாக
கேட்பதெல்லாம்
உன் குரலாக
மணப்பதெல்லாம்
உன் கூந்தல் மணமாக
நினைவெல்லாம்
உன் நினைவாக இருக்க
என்னைச் சந்தைக்கு
அழைத்துச் சென்றனர்
விலைபேசி விற்பதற்கு

## பேப்பசி



என்னைக்
கண்டதும்
முதல் முத்தமே
உண்டு
என்றாள்

கண்டாள்!

கண்டதும்
உண்டுதான் விட்டாள்
என்
உதட்டினை

## காதல்
## பேச்சு
## வார்த்தை

தேசியக்கொடியின் கீழ்
நான் கொடுத்தேன்
ஒரு கனி முத்தம்
பேசிய பேச்சுக்கும் மேலாகத்
தான் கொடுத்தாள்
ஒரு தனி முற்றம்

# தமிழின் முத்தம்

விரல்களால் மீட்ட வீணையில்
கானம் பிறக்கிது - உன்
விழிகளால் மீட்ட அக்கணம்
காதல் பிறக்குது

பூவிதழ்களை முத்தமிட
வண்டுக்கு தேன் கிடைக்குது
பூவையே உன் இதழ்களை
கண்டு நெஞ்சுள் தேன் சுரக்குது

வள்ளுவன் தந்த திருக்குறளிடை
இரு மதியின் கீழ் தவிக்குது
வள்ளல் என்று தன்னையே தந்த
உயிர்நதி இரண்டும் சங்கமமாகுது

சங்கம் வளர்த்த தமிழை
ஈழ மறவர்தம் வீரம் காக்குது
குங்குமம் ஒளிவிடும் நெற்றியில்
தமிழின் முத்தம் பதிக்குது



# கட்டில்

வீணைக்கு
நரம்பு போல்
புல்லாங்குழலுக்கு
காற்றுப்போல்
கணையாழிக்கு
வைரம்போல்
குழந்தைக்கு
தாய் மடிபோல்
இணையில்லாப்
பொருத்தம்
உலகில் வேறு
உண்டானால்!
அது

என் விழி தூங்க
உன் தோள் ஒன்றே



# பிறந்த நாள் அதிசயம்

நீ இளையவள்
நான் மூத்தவன்
இருப்பினும்
நமக்கு
பிறந்த நாள்
வருடம் திகதி யாவும்
ஒன்றே!
அம்! அதுவல்லவா
நம் காதல்
பிறந்த நாள்

# நண்பனின் தங்கை

காதல் காதல்
அது
என்னடா என்று
என் நண்பனிடம் கேட்க

இடையே
இல்லாமல் - ஒரு
மாந்தோப்பு
எதிரில் வந்து
என் வாயை
அடைத்துச்சென்றது

திரும்பிப்பார்த்தேன்
என் நண்பன்
இல்லை! இல்லை!!
இப்போ அவன் - என்
மைத்துணன்





# அன்னையின் காதல்

நிலவைக் காட்டிச்
சோறு ஊட்டினேன் - நீ
என் தோளில் இருந்தாய்

பந்தைக்காட்டிச்
சோறு ஊட்னேன் - நீ
புற்தரையில் இருந்தாய்

மல்லிகையைக் காட்டிச்
சோறு ஊட்னேன் - நீ
அவள் மனதில் இருந்தாய்

ஒவ்வொரு நிலையிலும்
நீதான் மாறினாய் - ஊட்டிய
இத்தாய் நினைப்பில் மாற்றமில்லை

# வேலிக்குள் கயல் மீன்கள்



வேலிக்குள்
கயல் மீன்கள்
துள்ளிப் பாயுதடி
என் மேனிக்குள்
புயல் வீசியும்
பூக்கள் மலருதடி

கோயிலில் என் மனசு
முருகனை மறந்ததடி
கோலமது முற்றத்தில் - என்
முகவரியைச் சொன்னதடி

நயமான நற்கவிகள்
நமக்குள் பிறக்குதடி
இயல்பாக தமிழ் வந்து
இமைக்குள் விழிக்குதடி

# சின்னஞ்சிறு வயதில்




ஆறு வயதில்
சிறு பள்ளிசென்றேன்
மணல் விளையாட்டில்
ஒட்டியது கல்வி.

பதினாறு வயதில்
உயர் பள்ளிசென்றேன்
கடல் மணலோடு
ஒட்டியது காதல்.

இருபத்தியாறு வயதில்
இன்பப் பள்ளிசென்றேன்
கட்டிலோடு ஒட்டியது
இன்பத் தொட்டில்.

# தமிழை விடவா நீ அழகு!

குறளைவிடக்
குறுகியது - உன்
இடை
வான் நிலவைவிட
குளிர்மையானது - உன்
இதயம்
முத்தமிழை விட....
இல்லை! இல்லை!

முத்தமிழ்போல்
சுவையானது - உன்
தேன்மொழி



# தமிழினி

கரும்பிலும்
இனியவள்
தேன் நிலவிலும்
ஒளியவள்
முத்தமிழுக்கே
முடியவள்

# காதலர் தினம்



இன்று
காதலர் தினமாம்
என் பேத்தி
ஈமெயிலில்
யாருக்கோ - பூ
அனுப்புகின்றாள்
என் மகளும் மருமகனும்
பக்கமே நின்று
பார்த்தே இரசித்தனர்
இத்தினம் அத்தனை
புனிதமாம்
இருந்தும்... என் நெஞ்சினில்
ஒரு வலி
அது என்னவளுக்கு
ஒரு பூக்கொடுத்ததால் - அன்று
அப்பனும், மாமனும் - காலை
மெயில் வண்டியில் வந்து
என்னை ஏறி மிதித்த வலி.
காலம் மாறிவிட்டது - ஆனால்
கடிகாரம் தேய்ந்துவிட்டது.

# அதிசயப் பூக்கள்

புத்தாண்டு மலர
இரு வினாடிக்கு முன்னம்
அந்த ஈபில் கோபரத்தின்
அடியில் கூடி நின்றேன்
வானில் மலரும் அந்த
வண்ண வேடிக்கை காண

இரு நொடியில்
மணியடிக்க
வானத்தில் மத்தாப்பூ
பூச்சூட
புத்தாண்டு பிறந்தது
கூடவே என் முன்
நின்றவள் - விழிகளில்
காதலும் பூத்தது



கோபுரத்தின்
உச்சிக்கு
ஏறும் போது
ஏறினேன்
உச்சத்தைத்
தொட்ட பின்பு
இறங்கினேன் அல்ல
இறங்கினோம்

நிமிர்ந்து பார்த்தேன் - அந்த
அதிசயக் கோபுரத்தை
அதைவிட அதிசயம்
எங்கோ பிறந்தவள்
இங்கு என் நெஞ்சினில்
வந்து கலந்ததுதான்

# குளிர் விட்டுப் போச்சு!

என்னை
காதலிக்கிறாயா?
என்றேன்
என்ன பெயர்
நம் குழந்தைக்கு
வைக்கலாம்?
என்றாய்

என்னில் எது பிடிக்கும்
என்றேன்?
கண்ணில் எது பிடிக்கும்?
என்றாய்



கேள்விக்கு கேள்வி
நேர் பதிலாச்சு
நம் காதல்
வேள்விக்கு - அதுவே
நெருப்பாச்சு



# அதுவே காமம்

எண்ணெய் இன்றி
விளக்கெரிந்தால்
அது காதல்

மலர்கள் இன்றிக்
கனி கிடைத்தால்
அது காதல்

நிலவு இன்றி
ஒளி தெரிந்தால்
அது காதல்

அலைகள் இன்றிக்
கடல் தெரிந்தால்
அது காதல்

காற்றே இன்றி
மரம் அசைந்தால்
அது காதல்

காதலின்றி வெறும்
உடல் கலந்தால்
அது காதலா?

இல்லை
அதுவே காமம்.



# காதலின் உறைவிடம்

உன்னைப் பிரிந்தும்
இத்தனை காலம்
இந்த உடல்
கெடவில்லையே
என்று
பார்க்கிறாயா?
அன்பே!
உன் நினைவென்னும்
பனிக்குன்றில்
உறைந்தல்லவா
இருக்கிறது
உன் உயிரைச்
சுமந்த உடல்

# திறவுகோல்
## *Pass word*

கண்ணுக்கு
கண்ணாக - நீ
கணனிக்கும்
கண்ணாகும் -நீ

உன் பெயர் சொல்ல
என் விழி திறக்கும்
உன் பெயர் எழுத
கணனியும் திறக்கும்

# இழப்பின் மேல் காதல்

இடியும் மின்னலும்
மின்சாரத்தைத் துண்டிக்க
இருளின் பிடியில்
இன்ப உறவுகள் கலங்கிட
மூலையில் கிடந்த
குப்பி விளக்கொன்று
தானாக வந்து
ஒளிகொடுத்தது
அந்த ஒளியிலும்
மின்சாரத்தின்
பெருமையை நினைந்தே
உருகினர் உறவினர்
இடியும் நின்றது
மின்னலும் ஓய்ந்தது
மின்னொளியும் வந்தது
குப்பிவிளக்கோ அது
மறைந்தது......இல்லை
மறைக்கப்பட்டது

# குத்தாதே

முத்திரை
குத்தாதே
என்னவள் எழுதும்
கடிதத்தின்
முத்திரையில்

அதை

அவள் உயிரும்
எழுத்தும் தாங்காதே



# பட்டாபிஷேகம்



முடியில்லாத
மன்னன் - நீ
உன்னை
கட்டியணைக்கையில்
என் நெஞ்சினில்
முடி சூடிவிட்டேன்

# அது போதும்!

அன்பே
நீ ஒரு கடிதம்
எழுது
என்னை நேசிப்பதாக
வேண்டாம்
எவரையும்
நேசிக்கவில்லை
என்று



# சந்தேகமே நீ வாழ்க!

என்னைத் தடவிச்சென்றது
உன் தாவணியா
இல்லை
தென்றலா?
என்னைக் கட்டி அணைத்து
முத்தமிட்டது
உன் இதழ்களா
இல்லை
மலர் இதழ்களா?
என்னை அழைத்தது
உன் குரலா
இல்லை
கானக்குயிலா?
என்னைக் கவிஞனாக்கியது
உன் காதலா
இல்லைக்
கண்ணதாசனா?

# என் தாரம்



அறுபது நிமிடம்
காத்திருந்தால்
ஒருதரமேனும்
முத்தமிடும்
கடிகாரம் - நீ
ஒருதரம் என்னை
முத்தமிட்டால்
ஆயுள் வரைக்கும்
காத்திருப்பேன்- நீ
என்தாரம்

# நிலவே சாட்சி

என்தோளில் அவள் சாய்தால்
பூக்களுக்கு வாயூறும்
என் நெஞ்சில் அவள் படர்ந்தால்
தீக்குள்ளும் பூ மலரும்
என் இதழோடு அவள் இதழ் சேர்ந்தால்
காலைச் சூரியனும் கண்ணுறங்கும்
எம் காதலை பிறர் பிரிப்பரென்றால்
வேலை நிறுத்தத்தில் நிலவிறங்கும்

# உயிரினில் கரைந்து

தனிமையைத்
தொலைக்கும்.
முதுமையை
விரட்டும்.

கொடும் நோயினைக்
கொல்லும்.
பிரிவினை
இணைக்கும்.

ஓவியத்தை

என்னுயிரினில்
கரைத்து
காவியமாய்
அளிக்கின்றேன் - உன்
பிறந்தநாள்
பரிசாக.

இந்த
மண்ணில் அல்ல
அந்த
விண்ணிலும் அல்ல
என்றும் - உன்
நெஞ்சினில் வாழும்
காதலனாக



# பகற்கொள்ளை



ஆயத்தங்கள் - பல
செய்து
ஆயுத பலங்கொண்டு
தேயும் நிலவதின்
இறுதி நாளில்
பேயும் பிசாசும்
உலாவரும்
மாயமாளிகையில்
கன்னமிட்டேன்
மாட்டிக்கொண்டேன்.

அவளோ!

ஆயத்தம் ஏதும் இன்றி
ஆயுதம் எதுவும் இன்றி
ஆகாயத்தில் நிலவு இன்றி
அந்த ஆதவன்
உச்சியில் நிற்க
அடித்தாள்
பகற்கொள்ளை
துடித்திடும்
கயல்விழிகளினால்

கிட்டியது

கொள்ளை இதயம்.



# அகலிகை

அடியே!
நீ அகலிகைதானே!
அதுதான்
இப்பிறப்பில்
என்னைக் கல்லாய்ச் சபித்து
என்மேல் அமர்ந்து
சிரிப்பாய்ச் சிரிக்கின்றாய்!

இப்படிக்கு
உன்
முன்னாள் கணவன்
விஸ்வாமித்திரர்

# தூரத்து முத்தங்கள்



தொலைவில்
ஒரு முழக்கம்
என் நெஞ்சில்
பட்டுத் தெறிக்கும்
அன்பு மழைத்
துளியாய்

தொலைவில்
ஒரு நிலவு
என் விழிக்கு
ஒளிகொடுக்கும்
இன்ப ஒளிக்
கதிராய்

தொலைபேசியில்
ஒரு முத்தம்
தொலைவில் இருந்தும்
நித்தம் கிட்டும்
என்தன் உயிர்க்காற்றாய்

# மணக்கவில்லை

மலரின் இதழுக்கு
நோகுமென்று
நான் மணப்பதில்லை
மலரை மட்டுமா?
உன்னையும்தான்
மணக்கவில்லை!



# கறுப்பு முத்தம்

பட்டப் பகலில்
ஒரு கறுப்பு முத்தம்
என்னுயிர் கிணற்றில்
நீளக் குழாயிறக்கி

பட்டைக்கிடங்குள்
பதுக்கிவைத்த
காதல் நீர் ஊற்றை - நீ
உறிஞ்சி எடுக்கையில்

பட்டென்று என் உயிர்
உன்னிடத்தில் வந்து
ஒட்டிக்கொண்டதே
அன்புச் சிறகடித்து!

உண்மையைச் சொல்
நீ பறவையா- இல்லைப்
பிரிந்து சென்ற என்
காதலனா?

# காதல் யாகம்



ஊர் உறங்கையில்
நாம் விழிக்கின்றோம்
ஊர் விழிக்கையில்
நாம் உறங்குகின்றோம்
எம்மைப் பிரிக்கும் - அந்த
உறவுகளைத் தவிர்க்கும்
காதல் யாகம் இது

# இயற்கை

பூவின் மேல்
வண்டிருக்கவேண்டும்
வண்டின்மேல்
பூ வேண்டாம்

# காதலில் குரங்குப் பிடி



உன்னை நெருங்கும்போது
உறவினர் என்னை
விலங்கென்றனர் - என்னை
விலகென்றனர்

பருகிடும் போது பாலைக்
கள்ளென்றனர்
என் மனதைக்
கல் என்றனர்

குரங்கின் கைப் பூமாலை
அதன் விளக்கம் நான் என்றனர்
இறங்கினர் இன்று நாணினர்
இதமான நம் வாழ்வு கண்டு

# உயிர்ப்பூ



விழி மடலால்
முத்தமிட்டு
இதழால்
முகம் துடைத்து
தாய்ப் பசுவின்
பரிவுணர்த்தி
கார் குழலால்
பாய் விரித்து
நெஞ்சணையால்
அணை சேர்த்து
சுவாசங்கள்
இணைந்து ஒன்றாய்
இருமூச்சு ஓர்மூச்சாகி
அந்த மூச்சோடு! மூச்சாய்!!
இன்பப்பாற் கடலைக் கடைந்து
முத்தமிழ் அமுதம் சுவைத்து
இன்பப்போதையில்
மதியினைத் தொலைத்து
வான் மதியினைத் துரத்தி
ஆதவனை அணைத்திடும்
இளம் காலை வந்த வேளை
யார் இவர்கள்?
என்ற கேள்வி பிறந்தது.
உனக்கும், எனக்கும் அல்ல
அவர்களுக்கும்தான்.
"நாம் யார்?" என்று புரியவில்லை
காரணம்,
உருகியதும் - பின்
ஒட்டியதும்
அவர்கள் உயிரே அன்றி
உடல்கள் அல்ல.

# பொய் அழகு

நாதம் வீணையுள்
பிறக்க
நாதனோ என்னுள்
உறங்க
போதும் போதும்
என்றது என்னுடல்.
ஆனால்!
அது பொய் பொய்
என்கிறதே என் மனம்.



# நினைவே...

நிலவொளியில்
குழைத்து உண்ட
சோறுபோல் மனதைக்
குடைந்திடும் - அவள்
நினைவுகளும்
மடைதிறந்த வெள்ளமெனச்
சில கனவுகளும் மிஞ்சிட
இடையில் அவள் இடையில்
நினைவே கவிதையானதே

# இன்பமறதி



நாக்காலே
மூக்கைத் தொட்டாள்
கிளிப்பேச்சாலே - என்
நெஞ்சைத் தொட்டாள்
வளைக்கரத்தாலே
வளைத்துக் கொண்டாள்
இடையில் இருப்பதை
மறந்துவிட்டாள்.
அதுதான்,
உன்னையும்
என்னையும் - இந்த
உலகையும்.

# எல்லைக் கன்னி

அரசே!
என் காதலியை
எல்லைப் படையில்
சேர்த்துக் கொள்ளுங்கள்
எல்லா எதிரிகளையும்
பார்வையால்
வீழ்த்திடும்
வல்லமை பெற்றவள்



# முதற்படம்

அபூர்வராகங்கள்
பார்த்துவிட்டு
வந்தோம்
பெரும் வெற்றிப்படமாம்
அத்தோடு ரஜினிக்கும்
அதுவே முதற்படமாம்
எமக்குக் கதையும்
புரியவில்லை
பாட்டும் கேட்கவில்லை
புதை இருளில்
என் கரங்களுக்குள்
போதையாய் அவள்

அதுவல்லவா எமக்கும்
முதற்படம்



# கடந்து வந்த பாதை

கடுகளோ வெற்றி
மலையளவோ
உளமளவில் என்றும்
உலகளவே
கடந்த பாதையைத்
தொலைத்துவிட்டு
வெறும் வெற்றியில் மட்டுமே
கோபுரம் நிற்குமென்றால்
உலகம் யார் அவன்?
எனப் பார்க்கு முன்னே
பாரில் வீழ்ந்திடும்
வெற்றுக் கோபுரமே
நாளை உலகம்
தேடுமென்றால்
தேடுவது
உன்னையல்ல...
வெற்றியை நீ அடைய
கடந்து வந்த
உன் பாததைய்யயே

# தாய்மொழிக் காதல்

இதழ் மேல் - உன்
இதழ் வேண்டும்
இதழ் விரிந்தால் - இன்பத்
தமிழே வேண்டும்

# தெய்வக் குற்றமா!



சிவராத்திரியில்
விழித்திருந்து
சிவனருள் வேண்டி
பாடினாய் - நீ
தேவாரம்

ஒரு மாதிரியாய்
என்னுள் ஒளித்திருந்த
அந்தக் காதலரும்பு
பாடும் இசைகேட்டு
வேர்விட்டு
ஊர்விட்டு
உன்மேல் மெல்ல
பற்றிக்கொண்டது

காதல் தெய்வீகம்
என்று சொன்னால் - உன்னை
பற்றியதும்
படர்ந்ததும்
தெய்வக் குற்றமா?



## ஆய்வும் கூடலும்!

ஆய்வுகூடத்தில்
தவளை ஒன்றை
குறுக்கே வெட்டி
கால்களை நாற்புறம்
இழுத்துக் குத்தி
அவளையும், அவனையும்
தவளையின் இதயத்தை
தேடவிட்டார் - அந்த
உயிரியல் ஆசிரியர்

தொலைந்ததோ
பாரினில் அவர்கள்
இதயம்தான்

## கற்றது காதலளவு

முத்தத்தைக்
கண்டு பிடித்த
விஞ்ஞானிகள் நாமே
என்று ஆணவம்
கொண்டவேளை
இரண்டு
கட்டெறும்புகள்
எம் எதிரில் நின்று
எதிர் காதல் அறிக்கை
ஒன்றை விட்டுச்சென்றது

# வீணையாடா நான் உனக்கு



என் மடியில் - நீ
வீணையானால்
எட்டாவது சுரம் ஒன்று
அங்கு அரங்கேறும்.
உன் இதழ் எனக்கு
புல்லாங் குழலானால்
கார்குழல் ஏங்கும்
என்விரல் பூக்கும்
உன் இடையை
ஒரு மின்னல்
வெல்லுமானால்
உலகம் தன் உயிரைத் துறக்கும்.
உன் நிறமும்
என் நிறமும் சேருமானால்
வானவில்லில் எட்டாவது
நிறம் தோன்றும்
உன் பார்வை ஒளி
என் மேல் படுமானால்
ஆதவனுக்கு - இனி
நிலவே ஒளிகொடுக்கும்

# ஒரு வழிப்பாதை

உன் விழிகள்
எனக்கு
ஒருவழிப்பாதை.
சென்றேன்!
திரும்பிட
வழியும் இல்லை
மனமும் இல்லை.
உள்ளிருந்து
உனைப்பார்த்தேன்
அடடா!அடடா!!
கள்வடியும் பூக்கள்.
அதன் சுகமும், சுகந்தமும்
எனக்கு பிரம்மன் தந்த
கள்ள வரம்.



# மழலை

தூரிகை கொண்டு
காரிகையின்
எழில் வர்ணத்தில்
தொட்டுத் தொட்டு
வரைந்த
ஓவியத்தின்
பெயர்
மழலை

# காதல் இல்லம்

என் விழிகள்
என்னோடு
பார்வை
உன்னோடு

என் செவிகள்
என்னோடு
ஓசை
உன்னோடு

என் இதழ்கள்
என்னோடு
பேச்சு
உன்னோடு

என் உறக்கம்
என்னோடு
கனவுகள்
உன்னோடு

என் உடல்
என்னோடு
உயிர்
உன்னோடு

எத்தனை
ஓடுகள் அன்பே!
நம் காதல்
இல்லத்திற்கு



# இன்ப மறதி

தேன் சுவையை
மறந்துவிட்டேன்
தேனிதழின் சுவை
தெரிந்த பின்னே
மாலை நேரத்தை
மறந்துவிட்டேன் - உன்
மாலை என் தோளில்
விழுந்த பின்னே

# என்னுள் கரைந்தவள்



நடக்கும் போது
கொலுசு சத்தம்
கொலுசைக்
காணவில்லை
சிரிக்கும்போது
முத்துக்கள் தெறித்தன
சிப்பியைக்
காணவில்லை
அவள் கூந்தலில்
மல்லிகையின் சுகந்தம்
மல்லிகையைக்
காணவில்லை
மங்கையின் பாடலில்
குயிலின் ஓசை
குயிலைக்
காணவில்லை
இன்று
கொலுசும்,
குயிலும்
மல்லிகையும்,
முத்துச்சிப்பியும்
என் முற்றத்தில்
முன்வந்து நிற்க
அவளைக்
காணவில்லை!

# தூரிகையில் மலர்ந்த காரிகை

நீ பிறந்த நேரம்
பூ மலர்ந்தது
மழை பொழிந்தது
குயில் பாடியது
மயில் ஆடியது
என்றெல்லாம்
உன் பிறப்பை
நான் வர்ணிக்கவில்லை
ஆனால்!
எனக்கு
நீ பிறந்தபோது
மூச்சுவந்தது
பேச்சு வந்தது
கவிதை மலர்ந்தது
ஓவியம் படைக்க
என் தூரிகை
உன் வர்ணத்தில்
நனைந்தது
அப்போ!
இது மட்டும்
வர்ணனை இல்லையா?
இல்லை
அது என்னவள்
என் உயிருக்குத் தந்த
பேரணை



# காமன் களம்



முதுகின் பின்னே
ஒளிவதும் சுடுவதும்
கோழைத்தனம்
வீரனுக்கு
அது
போர்க்களத்தில்

ஆனால்...

காதல் களத்தில்
காமன் யுத்தத்தில்
அது அச்சமல்ல
அதுவே உச்சம்

# ஞானம்

உடலை விரித்தேன்
காமம் வந்தது
காமத்தை எரித்தேன்
காதல் வந்தது
காதலைப் பிரிந்தேன்
ஞானம் வந்தது

# இதழ் இல்லாத பூக்கள்



பூப்பறிக்கச்
சென்றகாலை
நந்தவனத்துள்
உறங்கிவிட்டேன்

நெய்கடையச்
சென்றவேளை
மத்தினை
உருக்கிவிட்டேன்

முத்தெடுக்கச்
சென்றமாலை
சிப்பிக்குள்
மூழ்கிவிட்டேன்

முத்தமிடச்
சென்றதாலை
இதழ்களை
விழுங்கிவிட்டேன்

# அமாவாசை

என் தோளில் அவள் சாய்ந்தால்
பூக்களுக்கு வாயூறும்
என் நெஞ்சில் அவள் படர்ந்தால்
தீக்குள்ளும் பூ மலரும்
என் இதழோடவள் இதழ் சேர்ந்தால்
காலைச் சூரியனும் கண்ணுறங்கும்
எம் காதலைப் பிறர் பிரித்தால்
பாரில் வேலை நிறத்தத்தில் நிலவிறங்கும்

# பேயாய்த் திரிய ஆசை!



நூலாய்
பிறக்க ஆசை
உன்னையே
நூலாய்
படிக்க ஆசை

பூவாய்
பிறக்க ஆசை
உன் தலையில்
பூவாய்
விரிய ஆசை

காயாய்
கனிய ஆசை
உன் இதழில்
தேனாய்ச்
சொரிய ஆசை

பாலாய்
பருக ஆசை
நீ மறுத்தால்
பேயாய்
திரிய ஆசை!

# பம்பரம்

துடியிடையில் பம்பரமாய்ச்
சுற்றுதடி என் மனசு
கோடி மலரே உன் கூந்தலில்
தினம் மலருதடி என் மனசு

# எங்கே தொலைந்தது அந்தப் புழுக்கம்

அம்மா சொன்னா
புகைவண்டியில்
நெருக்கம் என்றால்
கத்துவேனாம்

மாமா சொன்னார்
கோவிலில்
நெருக்கம் என்றால்
கதறுவேனாம்



அப்பா சொன்னார்
பள்ளிசெல்லக் காரில்
நெருக்கம் என்று
அப்போ சைக்கிள்கேட்டு
ஆக்கினையாம்

அக்கா சொன்னா
கட்டிலில் நெருக்கம்
புழுக்கம் குறட்டை எனத்
தனிக் கட்டில் கேட்டு
தினம் ரகளை என்று

இப்போ அப்பனுக்கும்
புரியவில்லை
ஆத்தைக்கும் தெரியவில்லை
இன்று இந்த நெருக்கம்
ஏன்? அந்தப் புழுக்கத்தைக்
கொடுக்கவில்லை என்று

# மடி மந்திரம்

பகலை இரவாக்கும் - பின்
இரவைப் பகலாக்கும்
உன் மடி அடி
பொழுதைக் கரியாக்கும் - பின்
கரியை வைரமாக்கும்
உன் பிடி அடி
பாலை மோராக்கும் - பின்
மோரை நெய்யாக்கும்
உன் துடி இடை அடி
அரசனை ஆண்டியாக்கும் - பின்
ஆண்டியை அரசனாக்கும்
உன் முடி அடி



# மல்லிகை



ஒரு
மல்லிகைப்
பூவினை
இதமாகப்
பறித்தேன்

ஏனோ அவள்
என் கன்னத்தில்
பளார் என்று
அறைந்து விட்டாள்

அப்போதுதான்
புரிந்தது
நான் பறித்த
மல்லிகை
பூத்ததோ செடியில்
அல்ல
அவள் கருங்கூந்தலில்
என்று

# ஒட்டுண்ணி

நீருக்குள் அன்பே!
உன் நிறைகுறைவு
இது ஆக்கிமிடிஸ்
சொன்னதல்ல
நானே நேரில் - அந்த
நீரில் கண்டுகொண்டேன்
பாருக்குள் அன்பே!
உனக்கு எவரும் நிகரில்லை
இதனையும்
யாரும் சொன்னதில்லை
நானே நேரில்
கண்டுகொண்டேன்
வேருக்கோ
இலை இல்லை
அன்பே!
ஊருக்கோ
நாம் உறவில்லை
என் உடலுக்கோ
என்னுயிர் இல்லை
உன் உடலில் வாழும்
இன்னொரு இலையல்லவா
என் உயிர்



# காதல் வேர்கள்

உன் நினைவுகளை
ஆழப் புதைக்கின்றேன்
என்னை வதைப்பதை
நிறுத்துமென்று
அவை
விதை என
முளைக்கிறதே
நெஞ்சில்
ஆழவேர்விட்டு



# முதற் கடிதம்

இன்னும்
அந்தப்
புத்தகத்தின்
நடுவே
சருகாய்க்
காய்ந்திருக்கும்
அந்த மலர்
காயம் உள்ள வரை
பூத்திருக்கும் - என்
இதயத்தில்

# பொட்டு

அந்தக்காலத்து
கிசுகிசுப்
பத்திரிகைக்குப்
பெயர்:
பொட்டு

# ஒரு பிரிவின் கோபம்

உன்னைக்
கொல்வேன்
என்றேன் - அவள்
கொல்லெனச்
சிரித்தாள்
அப்போதாவது
என்னருகே - நீ
வருவாய் என்று



# இரவே பிடிக்கும்

கருங்கல்லில் வடித்த
வெண்ணிலவு
கருங்குயிலை எதிரொலிக்கும்
வெண்மேகம்
வெண்திரைக்குள் ஒளிகொடுக்கும்
கருமணிகள்
கரும்பனை வடிக்கும்
வெண்கள்ளு
இத்தனையும் இவளுள்
கண்டதால்
பகலைவிட எனக்கு
இரவே பிடிக்கும்

## சங்கமம்

பாலோடு நீர் சேர்வதும்
சங்கமம் - அங்கே
பாலின் சுவைதான்
குறையும்
கடலோடு ஆறு கலப்பதும்
சங்கமம் - அதனால்
ஆற்றில் உவர்ப்பே ஓங்கும்
ஆணோடு பெண் கலப்பதே
சங்கமம் - இங்கே
இழப்பையும் மிஞ்சும்
மழலையின் கொஞ்சல்

# மலருக்கு ஒரு பூச்செண்டு



மலருக்கு மலர்
கொடுக்கும்
பூச்செண்டு- இது
மனதுக்கு மனம்
கொடுக்கும்
மலர்ச்செண்டு
உயிரே! - என்
உயிர் உள்ளவரை
தருவேன்
கவிச்செண்டு

# காற்றாக வேண்டும்

முனிவரே
எனக்கு
ஒரு சாபமிடு

என்னை
காற்றாய்
மாறக் கடவாய்
என்று

ஆகா!

என்னவளே
உன் உயிர் மூச்சாய்
நான் இருந்திடுவேன்





# இடையினில்...

பனைமரம் இன்றும்
நினைவில் வரும்
பால்நிலா
என்னை அழைத்துவரும்
உன்னைத் தினம் மனம்
நினைத்துருகும் - இங்கே
பொன்னையும்,
**மண்ணையும்,**
பெண்ணையும்,
தந்தால் -அதில்
சரி இடையினில்
என்மனம்
கண்ணுறங்கும்.

# என் வீட்டுச் சாளரம்



என் வீட்டுச் சாளரம்
தினம் ஏராளம் பூப்பூக்கும்
கன்னமிட வேலையின்றிக்
காதல் கதவு திறந்திருக்கும்

செடி எல்லாம் அரும்பாகி
மொட்டாகி பின் பூப்பூக்கும்
நொடிப்பொழுது நான் பார்க்க
பட்டென்று அவள் இதழ் பூக்கும்

இடி இன்றி மின்னலின்றி
பெருமழை மனதுள் அடிக்கும்
மகரந்தப் பொடி தூவி
கருவினில் என் உயிர் கலக்கும்

# வியப்பு

உன்னுள் இருக்கும்
என்னையும்
என்னுள் இருக்கும
உன்னையும் - கண்ட
முந்தானைச்
சேலைக்கு
வியப்பில்
வியர்க்கிறது



# சந்தோஷச் சந்தேகம்

அம்மனுக்கு நேர்த்திவைத்து
தீ மிதித்தேன்
அப்போ
என்னைத் தீயோ
தீண்டவில்லை
இப்போ
உன் தாவணி
என் நெஞ்சில் பட்டதும்
பட்டென்று தீப்பற்றியதே!
என் இதயத்தில்
உள்ள காதல் என்ன
நெய்யா!
இல்லைப் பொய்யா?

**உங்கள் ஆதரவிற்கு நன்றி**

## Orientalische Textilien & Schmuck
Königswall 16 (am HBF)
44137 Dortmund
Germany
Tel: 0231/162377

## ASIA BAZAR
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303

## London Tex
Wholesale - retail in Textiles
and Jewellery
Rheinische Str 64
44137 Dortmund
Germany
TEL: 0231-1891220

## Lingam Asien Market
Adler str 5
44137 Dortmund
Tel/Fax:
0231/143811

## Pirruntha Silk House
Hasenbergstr. 39b
70176 Stuttgart
*Tel & Fax:*
0711/ 61 58 976

## ARO PRASI TRADE
Glashüttenplatz 11
45549 Sprockhovel
Tel: 02339 / 6478

## AKASH
Specialized in Sri Lankan &
East Indian Cuisine
Cattering & Take out
2116 Bridletown Cir
Scarborough, ONT
M1 W2L1
Tel: (416) 490-9801

## AFRO ASIAN MARKT
Harden Berge str.55
51373 Leverkusen
Tel: 0214 60 27 0 90

## TTS Brothers
Asien Supermarkt
Rheinische Str 52
44137 Dortmund
Tel: 0231 819288

## Rany Super Trink
Kluser Str 36
58511 Lüdenscheid
Tel: 02351/ 66 13 92

## Naveen Asian Markt
Kaiser Otto weg 3
59494 Soest
Tel: 02921/ 671439

## Peter Joseph
Immigration to canada
Tel: 416 757 7707
www.callpeterjoseph.com

## TTN
Tamil Television Network
0208 3771402
Germany

## Premii Cash & Carry
**Schonskanter Weg 31**
**41066 Mönchengladbach**
**Germany**
Tel:02161-293751

## Hopper hut
880 ELLESMERE Rd
(At Kennedy) UNITE 217
SCARBOROUGH ON
(416) 299 4311/299 7013

## கனீன் எலற்றோனிக்ஸ்
Schevenhofer Weg 24, 42111
Wuppertal
Tel: 0205 3423 740

## Travel AIR
Luisen Str.46
42103 Wuppertal
Germany
Tel: 0202/4936921

## Portello
70 Weybright Court,#6
Scarborough, On
M1s 4E4, Canada
Tel: 416 293 6555

## உங்கள் ஆதரவிற்கு நன்றி

## Manuel Jesudasan
Barrister & Solicitor
80 Corporate Drive Suite #210
Scarborough, Ontario M1H 3G5
Canada
Tel: 416 444 8070

## Neel Online.com
Please visit our website
for all your real estate needs...
www.neelonline.com
Canada

## Meditest
Colombo - Sri-Lanka
Stands for Accuracy and human Care
Dr.S.Sivarajan & Dr.Varny Sivarajan
118, Vivekananda Hill, Colombo-13
Tel: 01 459580
e-mail: meditest@slt.lk

## Mazda Meier
Kerkhagen 27 (Freisenberg)
58507 Lüdenscheid
Tel: 02351/ 9 97 87 60
Germany

## Little India
Textile & Jewellery
Meerer Hof 22
41462 Neuss
Tel 02131 / 27 36 92

# காதலர்கள்



நிலமகள்

கலாநிதி மு.க.சு சிவகுமாரன் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியின் புகழ் பார் எங்கும் பரப்பும் இன்னொரு ஏந்தல். உலகப் பல்கலைக் கழகத்தின் (Cultural Doctorate in Fine Arts - U.S.A.) கவின்கலையில் கலாநிதி என்னும் உயர் கௌரவம் பெற்ற முதல் ஈழத் தமிழன். கல்லூரியில் கற்குங்கால் சித்திரத்தில் தனித்திறமை காட்டிப் பல் கலைக்கழகம் புகுந்து அத்துறையில் பட்டம் பெற்று, தான் கற்ற கலையைத் தன் சமூகத்திதினுக்கு நல்க மகாஜனக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்தமை அவரின் நன்றியுணர்வினுக்குக் கட்டியம் கூறு கின்றது.

தந்தை தொடங்கிய 'வெற்றிமணி' யை ஜெர்மனியில் தொடர்ந்து பிரசுரித்து அகிலமெல்லாம் அதனை வெற்றிநடை போடவைத்தமை, 'இவன் தந்தை என்நோற்றான் கொல்" எனச் சொல்லவைக்கிறது.

பத்திரிகையாளனாய், ஓவியனாய், கவிஞனாய், சிறுகதையாளனாய் பேச்சாளனாய் சிவகுமாரன் பல்வேறு பரிமாணங்களில் பொலிவுறு வதைக்காண மனம் தித்திக்கிறது.

அவரது கவிதைகள் குறும்பா வகை. குறுகச் சொல்லி நிறையச் சிந்திக்க வைக்கிறார்.கவிதைகளுக்கு அவற்றுடன் வரும் புதிய முறை ஓவியங்களும் மிகையூதியமாக (bonus) அமைகின்றன.

ஒரு வசனம் சொல்லும் சேதியிலும் பார்க்கப் பல சமயங்களிலே வெறும் கோடுகள் புலப்படுத்தும் செய்திகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். சித்திரமே கவிதையாகவும், கவிதையே சித்திரமாகவும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் தமிழேகாதல் உங்களையும் தமிழ்மேல் காதல் செய்யவைக்கும் என்பது திண்ணம்.

**பொ. கனகசபாபதி**
(கனடா)
முன்னாள் அதிபர் மகாஜனக்கல்லூரி